gistered as a News paperin Ceylon P. M. G. NO. H. A 89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மார்கழிமீ உஉ (1946 டிசம்பர் 17 செவ்வாய்க்கிழமை) [இல எக


## அகிம்சை யாருக்கு?

(ஸ்ரீமத். ஸ்வாமி ஸர்வானந்தா)

[இன்று இந்தியாவிலே நிகழும் வகுப்புக் கலவரங்களில் குண்டர்களும், காடையர்களும் தாக்கினால், அகிம்சையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று காந்தியடிகள் கூறுகின்றார். அது அநுபவசாத்தியமல்ல; அப்படிச் செய்வது அதர்மம் என்று ஸ்ரீமத் ஸ்வாமி ஸர்வானந்தா அவர்கள் இக் கட்டுரையில் விளக்குகிறார்.]

யுத்தம், ஹிம்சை என்பன உலகமக்களுக்குக் கெடுதி விளைப்பன. எனவே அவற்றை நாம் எப்போதும் புறக்கணித்துக் கொள்ளவேண்டும் என்று மகாத்மாகாந்தி போன்ற பெரியார் கூறுகின்றனர். கல்கத்தா, பம்பாய் முதலாம் நகரங்களிலே சமீப காலத்தில் நிகழ்ந்த வகுப்புக் கலகங்கள்பற்றி எழுதுகையில் மகாத்மா காந்தி மக்கள் அகிம்சையைக்கடைப்பிடிக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். குண்டர்களும், காடையரும் ஒரு பாவமும் அறியாப் பாலகரைக் கொன்றாலும், பெண்களைக் கற்பழித்தாலும், மதம்மாற்றினாலும், ஹிந்துக்கள் பூரணமான அஹிம்சையைக் கைக்கொள்ளவேண்டும் என்று மகாத்மா கூறுகிறார்.

காடையர்களுடைய கிருத்திரமத்தால் ஹிந்துப்பெண்கள் கற்பழிக்கப் படலாம்; பச்சிளங் குழந்தைகள் கொல்லப்படலாம்: ஆனால் ஹிந்துக்களாயுள்ளார் பூரணமான அகிம்சையை அநுட்டித்து அதன் பயனாக இறந்தாலும் பாதகமில்லை, அப்படிச் செய்தால் ஹிந்துசமயமும், இந்தியாவும் மீட்கப்படும், இந்த நாட்டிலே இஸ்லாம் மதமும் சுத்திகரிக்கப்படும் என்று மகாத்மா எழுதி வருவது சாதாரண மக்களைத் திணறவைக்கிறது என்றே கூறுவேம்.

மகாத்மாவின் இந்தக் கொள்கையுடன் நாம் ஒத்துப்போக முடியாது. நாம்மாத்திரமல்ல, எங்கள் முன்னோரான ஹிந்து ரிஷிகளும் ஒத்துப்போகவில்லை. இந்த உலகிலே ஹிம்சையைக் கைக்கொண்டு, அக்கிரமம் செய்வோர்இருக்கும்வரை, அவர்களுடைய அக்கிரமத்தைத் தடுப்பதற்கு மற்றவர்களும் ஹிம்சையைக் கைக்கொள்ளத்தான் வேண்டும் என்பதே இக்காலப் பெரியார் கூற்றும், முந்திய இந்திய அறிஞர் கூற்றுமாகும், இரத்தத்துக்கு இரத்தம்! உயிருக்கு உயிர்! பலாத்காரம் செய்வோரை வேறெவ்வித வழியாலும் அடக்கமுடியாது. அப்படி அடக்கச் செய்யும் முயற்சிகள் வியர்த்தமாகவே முடியும். ஓர் உதாரணம் காட்டுதும்: சென்ற கல்கத்தாக் கலவரத்தின்போது, அந்நகரம் முழுவதும் கோரரூபிகளான குண்டர்கள் திரிந்தனர். ரத்தவேட்கைகொண்டு திரிந்த அவர்களிடம், யாரேனும் சென்று அஹிம்சை, சத்தியம் என்பவற்றைக் கூறினால் அவர்கள் கேட்டிருப்பார்களா? அவர்கள் மனிதராய்த் திரியவில்லை. மனித உருவம் படைத்த பிசாசுகளாகத் திரிந்தனர். அவர்களிடம் அகிம்சையைக் கடைப்பிடிக்க மகாத்மாகாந்தி கூறுவது, சாதாரண மக்களுடைய உயிரை அநியாயமாகப் போக்கடிப்பதாகும்; எங்களை ஓர் கூட்டம் ஓநாய்கள் கடிக்கப் பாயும்போது, நாம் அவற்றினை நோக்கி, அகிம்சையும் தர்மமும் போதித்தால் அவை கேட்குமா? ஓநாய், புலி, பாம்பு முதலாம் தீய பிராணிகள் எப்படி நல்லொழுக்கம், அகிம்சை, சத்தியம் என்பவற்றை அறியாவோ, அதேபோலத்தான் மனிதர் உயிர்களைப் போக்கடிக்க, கத்தியுடன் திரியும் குண்டர்களும் அகிம்சா போதனையைக் கேட்கமாட்டார்கள். இந்தக் குண்டரும், காடையரும் ஏதோ சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தம்மதமே சிறந்ததெனக் கண்டு அதனை ஸ்தாபிக்கவந்தவர்கள் அல்ல. வெறிபிடித்த நாய்கள்; உதிரம் குடிக்கும் பைசாசுகள். இவர்கள் முன்னிலையில் அகிம்சையைக் கடைப்பிடித்து கண்மூடிக்கொண்டு நின்றால் நிகழ்வது அழிவும் நாசமும் தான். எனவே மகாத்மாவின் போதனை இச்சந்தர்ப்பத்தில் பொருந்தாது. பொருந்தாதுமாத்திரமல்ல: அவருடைய அகிம்சைப்போதனைகளை இச்சந்தர்ப்பத்திலே கைக்கொண்டால், இந்த ஹிந்து சமூகமே நாசமாகிவிடும்.

உண்மையான அகிம்சையும், சத்தியாக்கிரகமும் எல்லாராலும் அநுட்டிக்கமுடியாதன என்பதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். தேகபந்தமறுத்து இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஜீவன்முத்தர் தான் உண்மையான அகிம்சையையும் சத்தியாக்கிரகத்தையும் கைக்கொள்ளக் கூடியவர். ஏன்? அவர்க்கு மரணமேயில்லை. அவர் எங்கும் பிரமத்தைக் காண்கிறார் அவர் கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை என்று அன்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கீதையிற் கூறியது இந்த ஜீவன்முத்தனைத்தான். அவனுக்கு இறப்பில்லை; பிறப்பில்லை. இன்பமில்லை; துன்பமில்லை. அவனைச் சாதாரண மனிதருடன் ஒப்பிட்டு, அவனைப்போல நடக்கச் சொல்லுதல் பேதமையின்பாற்பட்டதாகும் அன்றி வேறென்ன. இந்த உலகத்தில் இருந்து எங்கள் கருமங்களை நாங்கள் செய்யும்வரை, உலக இன்பதுன்பங்களில், சுகதுக்கங்களில் பங்குபற்றி, அவை அவைக்கேற்றபடி வாழ்வினை நடாத்தவேண்டும்.

ஒருவனுடைய முதற்கடமை யென்ன? தன சமூகம் அல்லது தேசத்தின் பொருள், மக்களின் ஆருயிர், கௌரவம் என்பவற்றைப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் முதற் கடமையாகும். இதுதான் ஒவ்வொருவரதும் முதல் தர்மமாகும். எங்கள ஹிந்து சமூகத்தின் வாழ்க்கை இந்த உண்மையினை மூலாதாரமாகக்கொண்


தொடர்ச்சி 6-ம் பக்கம்



"லவங்கி"
6-ம் பக்கம் பார்க்க


## 1 கோடி ரூபா!

### ஆயுர்வேதஉதவிக்குவேண்டும்

ஆயுர்வேத விசாரணைச்சபை சென்ற வாரம் காலியில் தனது விசாரணையை நிகழ்த்தியபோது சுதேச வைத்தியச்சபையில் அங்கத்துவம் வகித்திருப்பவரான முகாந்திரம் வில்லியம் விஜயரத்தின என்பவர், ஆயுர்வேத வைத்தியத்தின்பொருட்டு இப்போது அரசாங்கம் செய்துவரும் உதவி போதாது என்றும், குறைந்தபட்சம் ஒருகோடி ரூபாவாவது இதன்பொருட்டுச் செலவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இன்னும் ஆயுர்வேத வைத்தியர்களுக்குத் தனித்தனி 100 கழஞ்சு அபின் வழங்கப்படும் முறை நூதமானது. இவ்விஷயத்தில் ஓர் கிர்ணயம் செய்வதற்கு, தகுந்த சுதேச வைத்தியரைக் கொண்ட ஓர் சபை நிறுவி அச்சபை மூலமே அபின் கொடுக்கப்படல்வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுர்வேதம் இப்போதுள்ள கீழ்நிலைக்குக் காரணர் வைத்தியப்பகுதி மந்திரிதான் என்று மாத்தறை ஆயுர்வேத வைத்தியரான மிஸ்ரர் பீ அமரசேகரா என்பவர் குறிப்பிட்டார். மிஸ்ரர் ஜோர்ஜ் சில்வா மந்திரியாகவிருந்து இத்தனை வருஷ காலமும் அவர் ஆயுர்வேத வளர்ச்சியின் பொருட்டு எதனைச் செய்தார் என்று கேட்டார்.

## நிபுணர்கள்!

### பலர் வருகிறார்கள்

இலங்கையின் 5 வருடக் கைத்தொழில் திட்டத்தைச் சரிவர முடிப்பதற்கும், அதன் பயனாக இந்நாட்டிலே பல கைத்தொழில்களை நிறுவுதற்கும், உலகத்திலே ஓர் பெரும் கைத்தொழில் நிபுணரான டக்ரர் அண்டர்வுட் என்பவரை இலங்கை அரசாங்கம் ஆலோசகராக வரவழைத்திருக்கிறது என்ற செய்தி ஏற்கெனவே இப்பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

டக்ரர் அண்டர்வுட் என்பவருக்குத் துணையாக, பல்வேறு தொழில்களில் நிபுணரான வேறும் பலர் வருகின்றனராம். தாவர நெய் முதலியவற்றைத் தயாரிப்பதற்கு மிஸ்ரர் மண்டர்ஸ்ராம் என்பவரும், நெசவுத் தொழில் விஷயமாக மிஸ்ரர் ஜே. மோர்ட் என்பவரும், இன்னும் வேறும் பல நிபுணர்களும் இங்கே வருவாராம்.

### 85 லட்சம் டாலர்

ஐக்கியதேச ஸ்தாபனத்துக்கென நியுயோர்க் நகரத்திலே ஓர்நிலயம் அமைப்பதற்கு அமெரிக்காவின் கோடீஸ்வரரான மிஸ்ரர் ஜோன். டீ ருக்பெல்லர் என்பவர் 85 லட்சம் அமெரிக்கன் டாலர் உதவுவதாக அறிவித்துள்ளார் ஐக்கியதேச ஸ்தாபனம் எங்கே தனது நிரந்தரமான நிலயத்தை அமைக்கும் என்று முடிவான தீர்மானம் எதுவும் இன்னும் செய்யப்படவில்லை.

## இந்தியா - பலஸ்தீன்

### இரு நாடுகளிலும் உள்ள பிரச்சினைகள்

160 மைல் நீளமும் 70 மைல் அகலமும் உள்ளதாய், இந்த இலங்கையிலும் பார்க்கச் சிறியதாய் உள்ள பலஸ்தீனத்துக் கலவரங்கள் நின்றபாடில்லை இந்தப் பிரச்சினை இன்று பிரிட்டிஷாருக்குப் பெரிய தலைவலியைக் கொடுத்திருக்கிறது. ஆனால் அத்தலைவலியைத் தாமே ஆக்கிக்கொண்டனர் என்பதை பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் மறுக்கமுடியாது.

பலஸ்தீனத்திலேதான் தமக்குநாடு வேண்டும் என்பதில் யூதர் பிடிவாதமாகவிருக்கின்றனர். அராபியரோனிலோ, யூதர்க்கு இனியும் குடியிருக்க இடங் கொடுக்கக்கூடாது என்பதில் பிடிவாதமாகவிருக்கின்றனர்.

இப்போது கிடைத்துள்ள செய்திகளின்படி பிரிட்டிஷார், பலஸ்தீனத்தைத் துண்டாக்கி, ஓர்பகுதியை யூதர்க்கும், ஓர் பகுதியை அராபியர்க்கும் உதவத் தயாராகவிருக்கின்றனர். இதனை யூதர் வரவேற்கலாம். ஆனால், அராபியர்தமதுதாய்நாடுஎன்று கூறும் நாட்டைத்துண்டாடச்சம்மதிப்பார்களா? பலஸ்தீனம் ஒரேநாடு; அதனைத் துண்டாடமுடியாது என்று வாதம்புரியும் அராபியர் கூறுவது முழுவதும்சரி என்று இந்தியாவிலே ஜின்னுசாய்பு கூறுகிறார். ஆனால் அவர் இந்தியாவிலே செய்துவருவது என்ன என்பதைத் தம் மார்பைத்தட்டிக் [illegible]வாராக. பலஸ்தீனத்து ஆதிக்குடிகள் யூதர்தான். அவர்களுக்குப்பின்தான் அராபியர் அங்கே வந்தார்கள். அப்படிப்பட்ட பலஸ்தீனத்தைத் துண்டாடக்கூடாது என்று வாதாடும் ஜின்னுவும், அவருடைய சீடர்களும், ஹிந்துக்களுடைய சொந்த நாடாகிய ஹிந்துஸ்தானத்திலே ஒட்டவந்து, இன்று சொந்தம்பேசுவதோடு மாத்திரம் நில்லாமல் பாகிஸ்தான் வேண்டும். அதற்காக இந்தப் பரதகண்டத்தைத் துண்டாடவேண்டும் என்று விதண்டாவாதம் புரிகிறார்கள். தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் கூறுவதும் இஸ்லாமியக் கோட்பாடுகளில் ஒன்று என்று கேட்கிறோம்.

ஹிந்துஸ்தானம்—பரந்த ஹிந்துஸ்தானம்-வீர ஹிந்துக்களின் இரத்தத்தால் வளர்ந்த ஹிந்துஸ்தானம் இன்றும் ஒன்று; என்றும் ஒன்றாகத்தான் விளங்கும் என்பதை ஜின்னு கோஷ்டிக்கு அறிவித்து அவர்களுடைய மூளைப்பழுதுக்கு வைத்தியஞ் செய்ய வீரஹிந்துக்களும் சீக்கியரும் ஏனைய சமூகத்தினரும் ஆயத்தமாகவிருக்கிறார்கள் என்பது நல்ல உற்பாதம்.

### 10000 அணுக்குண்டுகள்

ஒன்று 0 லட்சம் டாலர் செலவில் 10000 அணுக்குண்டுகளை மிகவும் சுலபமாக உற்பத்தியாக்க அமெரிக்காவினல முடியும் என்று அமெரிக்காவின் சிககாகோச் சர்வகலாசாலைப் பேராசிரியரான வி. எச். ஊரே என்பவர் தெரிவிக்கிறார். இந்த அணுக்குண்டுகளால் உலகத்தின் பிரதான நகரங்களையெல்லாம் தவிடுபொடியாக்கி விடலாம் என்று அவர் கூறுகிறார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஜ
மார்கழி௴ உ௨ செவ்வாய்க்கிழமை

## இந்த ஆண்டில் வந்த அரிசி

பஞ்சத்தோடு கூடிய இந்த 1946-ம் ஆண்டு முடிவுறுதற்கு இன்னும் பதினன்கு நாட்களுண்டெனலாம்; இந்த ஆண்டிலே இலங்கையிலுள்ள மக்களுக்குக் கட்டுப்பாட்டின்படி வேற்றூர்களிலிருந்து வருமெனக் காத்திருந்த அரிசிதானும், அந்த அளவுக்கு வரவில்லையென்றும், அதனைக் காட்டிலும் குறைந்த தொகையேவந்ததென்றும் உணவுப் பொருள் தருவிக்கும் அதிகாரியாகிய திரு. K. ஆழ்வாப்பிள்ளையவர்கள் இப்பொழுது தெரிவித்துள்ளார். 1916-ம் ஆண்டிற்கெனக் கணக்கிடப்பட்டிருந்த அரிசியின் தொகை 324,000 தொன்; ஆனல் உண்மையில் வேற்று நாடுகளிலிருந்து இலங்கையில் வந்து சேர்ந்த அரிசி 260,793 தொன்; இப்படியே வேற்று நாடுகளிலிருந்து இங்கே யனுப்பப்படுமென எதிர்பார்த்திருந்த மாவின் தொகை 209,000 தொன்னும்; ஆனல் நிசமாக இலங்கை மக்களுக்குக் கிடைத்த மாவின்தொகை 206,653தொன் எனத் தெரிவிக்கப்படலாயிற்று; ஆனற் சீனி விஷயத்தில் மாத்திரம் வருமெனக் காத்திருந்த தொகையிலும் வந்து சேர்ந்த தொகை சற்றுக் கூடியிருக்கிறதாம்; காத்திருந்த சீனியின் தொகை 85 0 தொன்னகும்; இலங்கைக்கு இவ்வாண்டில் வந்துசேர்ந்த தொகை 8632 தொன்னகும்; மேலதிகமாக வந்த சீனியின் தொகை வெளிப்படை; இதற்குக்காரணமென்னவென்பதுபுலப்படவில்லை; இலங்கை மக்களின் அற்பஅதிர்ஷ்டம் போலும்.

இந்த ஆண்டிலே வேற்று நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்துசேர்ந்த அரிசியில்137,706 தொன் நிறைகொண்ட அரிசி எகிப்து நாட்டிலிருந்தும், 79,122 தொன் நிறைகொண்ட அரிசி தென்னபிரிக்காவிலிருந்தும், 43,115 தொன் கொண்ட அரிசி பிரமதேசத்திலிருந்தும் வந்ததெனத் திரு. K. ஆழ்வாப்பிள்ளையவர்கள் தெரிவிக்கிறார். கோதுமை மா விஷயத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து 189,492 தொன் நிறைகொண்ட மா இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டதெனவும், மோறிஷஸிலிருந்து 61,522தொன்கொண்ட சீனி இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டதெனவும் மேற்படி அதிகாரி தெரிவித்துள்ளார்; மேலும் உணவுக்குரிய பருப்புவகை உருளைக்கிழங்கு கறிக்காகியவெஞ்சனங்கள் இந்த ஆண்டின்முதலாறுமாசத்திலும் இலங்கையிலேகுறைவாகஇறக்குமதி செய்யப்பட்டனவெனவும், ஆனல், கிழக்கு ஆபிரிக்காவிலிருந்தும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும், மேலே சொல்லப்பட்ட பொருள்கள் இங்கு வரத்தொடங்கியமையினல், பிந்திய ஆறு மாசமும் மேற்படி பண்டங்கள் விஷயமாக அதிக பஞ்சம் ஏற்படவில்லையென்றும் திரு. ஆழ்வாப்பிள்ளையவர்கள் தெரிவிக்கின்றார்;

இலங்கையின் ஏனைய பாகங்களில் இப்பண்டங்கள் விஷயமாகப்பஞ்சம் ஏற்பட்டதோ அல்லவோ என்பதை நாம் தீர்க்கமாக அறியேமாயினும், இந்த யாழ்ப்பாண நாட்டில் இவ்வாண்டு முழுவதும் பருப்புவகை உருளைக்கிழங்கு முதலியனவற்றின் பொருட்டு இங்குள்ள மக்கள் பெரிதும் பஞ்சப்படுகின்றனர்; துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, நிலக்கடலை என்னுமிவைகள் யாழ்ப்பாணப் பகுதியிலேயுள்ள சங்கக் கடைகளிலாக, ஏனைய கடைகளிலாக, வேறுவகையிலாக சென்ற மூன்று நான்கு மாசகாலம் கிடைத்தில, இவை இப்பொழுதும் இங்கு அகப்படா. பதங்கெட்ட உருளைக்கிழங்கு மாத்திரம் இடையிடையே அரிதில் இங்கே அகப்படுகின்றது; தொகுத்துச் சொல்லுங்கால், உணவுப் பொருள் விஷயமாக இலங்கை மக்கள் இந்த 1946-ம் ஆண்டிலே பட்ட பஞ்சமும் கஷ்டமும் யுத்த காலத்திற்பட்ட பஞ்சம் கஷ்டங்களைக்காட்டிலும் மிக அதிகமெனலாம்.

இங்குள்ள ஐக்கிய சங்கக் கடைகளிற் கிடைக்குமென மக்கள் எதிர்பார்க்கும் "விசேஷ" பண்டங்களை, அக் கடைகளில் ஊரவர்கள் போய்க் கேட்குந்தோறும் கடைக்காரர் "இல்லை, வரவில்லை, தரவில்லை" என்று பலமுறையும் சொல்லி வந்தமையினல், சனங்களுக்கு யுத்த காலத்திலே சங்கக்கடைகளிலிருந்த நம்பிக்கை இப்பொழுது பங்கப்படுதலாயிற்று; சங்கக் கடைக்காரர் கூப்பன் முறையிற் சனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டிய "விசேஷ" பண்டங்களைத் துர்விநியோகஞ் செய்கின்றனரோ என்ற சந்தேகமும் இப்பொழுது ஊரவர்பாற் பிறந்துள்ளதெனலாம்; ஐக்கிய சங்கக கடைகள் சீர்திருத்தஞ் செய்யவேண்டிய முறையில் இருக்கின்றனவென்பதை அதிகாரிகள் அவதானித்தல் வேண்டும்; இந்த ஆண்டு முடிகிறது, அடுத்த ஆண்டிலாயினும் உணவுப் பொருள் விஷயத்தில் ஏதும் நன்மையுண்டாமோவென மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்கள்.

## மார்கழிமாசம்

நேற்று மார்கழிமாசப் பிறப்பாகும்; மனுஷர்களுக்குரிய ஒருவருடகாலம் தேவர்களுக்கு ஒரு முழு நாளெனவும் அந்த முழுநாளிலே இந்த மார்கழி மாசம் புலரிக்காலமாகுமெனவும் பெரியோர்சொல்வர்; புலரிக்காலம் தேவ பூசை வழிபாடு என்னுமிவற்றைச் செய்தற்குச் சிறந்த காலமாகும். இதனல் தேவர்களின் புலரிக்காலமாகிய இந்த மார்கழிமாசத்திலே நாள்தோறும் புலரிக்காலத்திலே திருக்கோயில்களில் விசேஷ அபிஷேகம் பூசைகள் நடக்கவேண்டுமென்பதும், அந்தப் பூசைவேளை தப்பாமல் அன்பர்கள் ஆசாரசீலராய் ஆலயஞ்சென்று சுவாமிதரிசனஞ் செய்யவேண்டுமென்பதும் மேலோர் விதித்தனவாம். நேற்றுத் தொடக்கம் புலரிக்காலத்தில் இங்குள்ள திருக்கோயில்கள்சிலவற்றில் 'கண்டா' மணியோசையும் சங்கநாதமும் வாத்திய ஒலியும் கேட்கப்படுகின்றன; அன்பர்கள் பலர் குளிர்காலம் மழைவேளையென்பவற்றைப் பொருட்படுத்தாது ஸ்நானஞ்செய்து சந்திவந்தனை முடித்து பால் இளநீர் முதலிய அபிஷேக திரவியங்களையேனும் அர்ச்சனைக்குரிய பழம் பாக்கு வெற்றிலை கருப்பூரம் மென்னுமிவைகளைக்கொண்ட தட்டினையேனும் ஏந்திக்கொண்டும், திருப்பள்ளியெழுச்சியை மெல்ல ஓதிக்கொண்டு பத்திசிரத்தையுடன் தங்கள் தங்கள் குலதெய்வம் எழுந்தருளிய கோயிலுக்குப் போகக் காணப்படுகிறார்கள்; சைவநன்மகளிர் வைகறையிலே நித்திரை விட்டெழுந்து சுத்தியுடையராய், தங்கள் வீட்டு முற்றத்தைப் பெருக்கிச் சாணமிட்டு மெழுகிக் கோலமிட்டு மார்கழிப்பிள்ளையார் "பிடித்து" வைத்து மலர் சாத்திக் கும்பிடக் காணப்படுகிறார்கள்; இச் சத்கருமங்களெல்லாம் காணக் கண்ணுக்கும் நினைக்க மனத்திற்கும் ஆநந்தத்தைத் தருவன; ஆனல், இங்குள்ள சைவமக்களெல்லாரும் இப்படிச் செய்வரேல் இந்த மார்கழிமாசத்திலே நடேங்கும் சிவமயமாகவும் மங்கலகரமாகவும் காணப்படுமல்லவா!

# இந்திய அரசியல்

சென்ற வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே இந்தியா சம்பந்தமாக ஓர் விவாதம் நிகழ்ந்தது. எதிர்க்கட்சித் தலைவரான மிஸ்ரர் சேர்ச்சில் தமது வழக்கமான நச்சுமொழிகளைக் கக்கினர், இடைக்கால அரசாங்கத்தைக் காங்கிரஸ் கைக்கு மாற்றிய நாள் தொடக்கம் இதுவரை பாரத நாட்டில் நிகழாத பயங்கரமான வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்துவிட்டன என்றும், வலிமைமிக்க முஸ்லிம் லீக்கைப் பின்பற்றும் முஸ்லிம் மகாஜனங்களின் சம்மதத்தைப் பெறாத எந்த அரசியல்திட்டத்தையும் திணிக்கக்கூடாது என்றும் அவர் கூறினர். இன்னும், இப்போது முஸ்லிம்லீக் இல்லாமலே இந்தியாவில் அரசியல் நிர்மாண சபை கூடியிருக்கிறது. இச்சபைசெய்யும் தீர்மானங்கள் செல்லுபடியாகுமா என்று மிஸ்ரர் சேர்ச்சில் பிரிட்டிஷ் மந்திரிகளை ஒன்றுக்குப் பலமுறை நேரடியாகக் கேட்டார். அதற்குப் பிரிட்டிஷ் மந்திரிகள் இப்போது பதில் சொல்ல முடியாது என்று பதில் இறுத்தனர். சுருங்கக் கூறுங்கால் மிஸ்ரர் சேர்ச்சிலின் அன்றைய பேச்சு நச்சுத்தன்மை கலந்த சின்னத்தனமானது. ஜின்னக் கட்சியைத் தட்டிக்கொடுப்பது; இந்தியாவில் வகுப்புக் கலவரத்தைத் தூண்டுவது; இவருடைய பேச்சினைக்கேட்க லண்டனில் நின்ற ஜின்னவும் அன்று சமூகமாயிருந்தனர் என்று பத்திரிகைகள்தெரிவிக்கின்றன. அவர்சேர்ச்சிலின் பேச்சினல் அகங் குளிர்ந்தேயிருப்பார்.

•

### ஜின்னு சேருவாரா?

சேர்ச்சிலின் பிதற்றல்களுக்குப் பதில் இறுத்த பிரிட்டிஷமந்திரிகள்—அவர்களில் விசேஷமாக மிஸ்ரர் ஏவி. அலெக்ஸாந்தர் இப்படியான விஷமிகளால்தான் இந்தியாவில் வகுப்புக் கலவரங்கள் மலிகின்றன என்று கூறினர். சேர் ஸ்ராப்போட் கிறிப்ஸ் பதிலளிக்கையில், பிரிட்டிஷ் அரசாங்கம் கடைசியாகக் கொடுத்துள்ள வியாக்கியானத்துக்குப் பின்னர், மிஸ்ரர் ஜின்னவும் அவருடைய லீக்கர்களும் அரசியல் நிர்மாண சபையிற் சேருவர் எனத் தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார். சேர்ச்சிலுடைய கன்ஸர்வேற்றிவ்கட்சியினரிற் பலரே அவருடைய கூற்றுக்களைக் கண்டித்துப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியா விஷயமாகக் கைக்கொள்ளும் கொள்கையை ஆதரித்தனர்.

•

### இந்தியக் குடியரசு

இந்தியா பூரண சுயராச்சியமுள்ள குடியரசாக விளங்கவேண்டும்; அதற்கேற்றபடியான அரசியலே நிர்மாணிக்கப்படல் வேண்டும் என்னும் கருத்துக்கொண்ட ஓர் தீர்மானம் அரசியல் நிர்மாண சபையில் எடுத்தாளப்பட்டிருக்கிறது.பண்டிதர்நேரு இதனைப் பிரேரித்துள்ளார். இத்தீர்மானத்துக்குப் பல திருத்தங்கள் செய்யவேண்டும் எனப் பல்வேறு அங்கத்தவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். எதிர்கால இந்திய அரசியல் குடியரசாக அமைவதுடன் நிற்காது இப்போதுள்ள இடைக்கால அரசாங்கமும் பூரண சுயராச்சியம் உடையதாக, தனது அதிகாரத்தை இந்திய மககளிடம் இருந்து பெற்று அவர்க்குப் பொறுப்பாக இருக்கவேண்டும். இப்போதே பிரிட்டிஷ் படைகள் வெளியேறிவிட வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் எவ்விததொடர்புமற்ற பூரண சுயராச்சிய அரசாங்கமாக இப்போதுள்ள இடைக்கால அரசாங்கத்தை ஆக்கவேண்டும் என்பது சமதர்மிகளின் திருத்தப்பிரேரணை. இவ்விஷயமாகஇப்போது ஓர் முடிவு செய்யாமல், கொஞ்சநாட்களுக்குத் தவணையிடவேண்டும் என்பது டக்ரர் எம். ஆர். ஜெயக்கரின் திருத்தப் பிரேரணை. இப்போது ஓர் பிரதான பகுதியினரான முஸ்லிம் லீக்கர்கள் இல்லாதபடியால், இந்த முக்கியமான விஷயத்தைத் தவணையிடுதல்வேண்டும் என்று ஸ்ரீ ஜெயக்கர் கோரியுள்ளார்.இதுசம்பந்தமான விவாதம் இன்னும் முடியவில்லை.

—

## 1 இருத்தல் மா

வருகிற திங்கட்கிழமை தொடக்கம் ஒரு இருத்தல் மா உதவப்படும் என்று ஓர் அரசாங்க அறிக்கை கூறுகிறது.

## தேவை

தென்னந் தோட்டக் கண்டக்டர்மார் ஐவர் தேவை; அநுபவத்துக்குத் தக்கவாறு மாத வேதனம் 60 ரூபா தொடக்கம் 80 ரூபாவரை உதவப்படும் 'ஸ்லீப் பர்க்கட்டை' வேலைக்கு சுறுசுறுப்பான திறமை வாய்ந்த 8 வாலிப விகிதர்மாரும் தேவை வேதனம் மாதந்தோறும் 30 ரூபாவும் உணவும். இவர்களைவிட ஸீனியர் பரீட்சையிற் சித்தி எய்திய ரைப் அடிக்கக்கூடிய ஒருவரும் தேவை அவர்க்கு வேதனம் மாதம் 40 ரூபாவும் உணவும்.

டிசெம்பர்௴ 18-ம் திகதிக்கும் 31-ம் திகதிக்குமிடையில் சித்தங்கேணியிலும், அதன்பின் மட்டக்களப்பிலும்தாராதரப்பத்திரங்களுடன் பின் வருவோரைக் கண்டு ஒழுங்குகள் செய்க.

முகாந்திரம். S. குமாரசுவாமி
சித்தங்கேணி, வட்டுக்கோட்டை.
Mis 275. 17, 20, 24 27-12-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எல்லார்க்கும் பொது

## சிங்களர்க்கு மாத்திரம் அல்ல

## இந்நாட்டின் பொருள் நிலைமை

பொருளாதார வீழ்ச்சி ஏற்படுமா? — அப்படியானுல் அதற்குப் பொறுப்பாளி

## செனனுயக்கா ஆட்சியின் விளைவு

(நமது அரசியல் நிருபர் எழுதுகிருர்)

இந்த இலங்கை செல்வம் கொழிக்கும் நாடு; தாம் தொட்டதெல்லாம் பொன்னுகிவிடும் என்று இன்று இலங்கையில் அதிகாரம் வகித்துள்ள மந்திரசபையினர் நினைத்துக் கருமம் ஆற்றி வந்திருக்கின்றனர். யுத்த காலத்தில் ஏற்பட்டுள்ள செல்வ நிலை தொடர்ந்து இருக்குமென்ற எண்ணத்துடன், இந்த மந்திர சபையினர் பல திட்டங்களை வகுத்தனர். அவற்றினுற் பயன் கிடைக்குமோ என்பது வேறு விஷயம். ஆனுல், இலங்கைக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான உற்பாதங்கள் இப்போதே தோன்றிவிட்டன. அக்டோபர் மாதத்துடன் இலங்கை அரசாங்கத்தின் நிதி வருடம் ஆரம்பமாகின்றது. இந்த மாதத்தில் இம்முறை இலங்கை அரசாங்கத்தின் வருமானம் மிகவாகக் குறைந்திருக்கிறது. 1645-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற் கிடைத்த வருமானத்திலும் பார்க்க இந்த ஆண்டு அக்டோபரில் 25 லட்சம் ரூபா வருமானக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் செலவு, சென்ற ஆண்டு அக்டோபரிலும் பார்க்க 6 லட்சத்தால் அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டுக்கு 35 கோடியே 20 லட்சம் ரூபா வருமானம் வரும் என்று எங்கள் சேர் ஒலிவர் குணத்திலகா கணித்திருந்தார். ஆனுல், முதல் மாதத்திலேயே இப்படித் துண்டு விழுந்திருக்கையில் இவருடைய கணிப்பு ஆண்டு முடிவதற்குள் எவ்வாருகி முடியும் என்று இந்நாட்டு மக்கள் அஞ்சவேண்டியிருக்கிறது. துறைமுகத் தீர்வையினுலும் வருமான வரியினுலும் மிகக் குறைவு ஏற்பட்டிருக்கிறது.

○

### காரணர் யார்?

இந்நாட்டின் பணநிலைமை இவ்வளவு அழகில் இருக்கிறது. சென்ற அக்டோபர்மாத வருவாய் இனி நடக்கவிருக்கும் நெருக்கடிக்கு உற்பாதமாக விருப்பதை இந்நாட்டு மந்திரி சபையினர் அவதானிக்காது "மண்டெரிதான் வாய் மடுப்பினும் மாசுணம்கண்டுயில்வ பேரா பெருமூச் செறிந்து" என்ருங்கு தங்கள் மனம் போனபடி புதிய திட்டங்களை வகுத்து இந்நாட்டுப் பணத்தை விருதாவிற் செலவழிக்கிருர்கள். இலங்கையின் வருமானத்தில் 100 க்கு 80 விகிதத்தை உத்தியோக வர்க்கம் விழுங்குகிறது மீதி 20 விகிதமும் தான் ஏனைய செலவுகளுக்குப் போகிறது. இப்படியான கேவலமான ஓர் பகுப்பு முறைக்கு இன்று நாட்டை இந்தச் சீரழிவு நிலைக்குக் கொண்டுவந்துள்ள செனனுயக்காக் கோஷ்டிதான் காரணம் என்று கூறலாம். மிஸ்ரர் செனனுயக்கா, தனது ஆயுட் காலத்துக்குள், இந்த இலங்கையின் அரசியல் பொருளாதார நிலையைப் பங்கப்படுத்திவிடவே கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிருர் என்று கூறினும் பொருந்தும்.

○

### சமதர்மிகள் எதிர்காலம்

கொழும்பு நகரசபையின் 30 ஸ்தானங்களுக்குரிய தேர்தல்கள் முடிந்துவிட்டன. இப்போது தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் 19 பேர் புதியவர்கள். 11 பேர்தான் முந்தி நகரசபையில் அங்கத்துவம் வகித்தவர்கள். இந்த 30 பேரில் குணசிங்ஹவின் தொழிற்கட்சியைச் சேர்ந்தவர்கள் நால்வரும், சமதர்மக் கட்சியினரில் ஒருவரும், சமசமாஜிகள் இருவரும் உளர். சமதர்மக்கட்சி தனது அபேட்சகராக 10 பேரை தேர்தலுக்கு நிறுவியது. அவர்களில் 9 பேர் தோல்வியடைந்தனர். இப்படியான தோல்வியைச் சமதர்மவாதிகள் அடைந்தபோதிலும், அவர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையில்லாமல் இல்லை. சமதர்மிகள் மிகவும் சொற்பமான வாக்குகளாலேயே தோல்வியடைந்திருக்கின்றனர் என்பதனையும், முந்தி நடந்துள்ள தேர்தல்களிலும் பார்க்க, அவர்கள் இப்போது எவ்வளவோ முன்னேறியிருக்கின்றனர் என்பதனையும் நாம் குறித்துக்கொள்ளுதல் வேண்டும். இந்த முறை, இடது சாரிகளான சமதர்மிகளும், சமசமாஜிகளும் ஆக மூன்றே மூன்று ஸ்தானங்களைக் கைப்பற்றியது அவர்களுடைய கட்சியின் எதிர்காலத்துக்கு நல்ல உற்பாதம் என்றே கூறவேண்டும்: எது எப்படியிருந்த போதிலும், இந்த மூன்று பேரும் கொழும்பு நகரசபை நடைவடிக்கைகளைக் கொஞ்சம் ஸ்வாரஸ்யமாக்குவர் என்று எல்லாரும் எதிர்பார்க்கிருர்கள்.

○

### தமிழ்மக்களின் நிலை

இன்று அரசியல் விஷயமாகத் தமிழ் மக்களுக்கிடையே கட்சிபேதமிருப்பது மிகவும் வெட்கக்கேடான ஓர் விஷயம் என்பதை மறைப்பதிற் பயனில்லை. இது எங்களின் எதிர்காலத்துக்குச் சாதகம் விளைப்பதாயில்லை. பொது ஜனங்களுக்குச் சேவை செய்வதையே லட்சியமாகக் கொண்டு தலைவர்கள் எனப்படுவோர் கிளம்பி கட்சிபேதம் பாராட்டி இடர்ப்படுகிருர்கள். இவர்கள் அனைவரும் உண்மையில் ஜனசமூக சேவையினையே ஆதாரமாகவும் லட்சியமாகவும் கொண்டுள்ளவர்கள் என்பது உண்மையானுல், இவர்கள் தமக்கிடையே யிருக்கும் கட்சிபேதத்தை ஒழித்து, ஒரேமுகமாகக் கருமம் ஆற்றினுல்தான், வருங்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏதும் சகாயம் செய்யமுடியும் என்பதை எவரும் ஒத்துக்கொள்ள வேண்டியது இன்று சிங்கள மக்களாயுள்ளார் தமக்கிடையே யுள்ள சாதிபேதம், சமய பேதம் என்பவற்றை விடுத்து. தாமும் ஓர் சாகியத்தார் என்று தலைநிமிர்ந்துநிற்கக் கருமம் ஆற்றுகிருர்கள். அவர்களின் தலைவர்களாயுள்ளார் ஏற்கனவே ஆற்றியுள்ள பல கருமங்கள், சிங்கள மக்களுக்குச் சாதகமா[illegible] பாதகமாயும் [illegible]

மேலும் தொடர்ந்து நடவாதிருக்கத் தமிழ் மக்களாயுள்ளார் நடைவடிக்கை எடுத்தல் வேண்டும். எதிர்காலம் தமிழ் மக்களுக்கு ஓர் சோதனை காலம். இதனைச் சமாளித்து, உண்மையான சேவை செய்வதற்கு தமிழ்த் தலைவர்கள் தமக்கிடையே பூரணமான ஒற்றுமை கொள்ளவேண்டும் கட்சிபேதம் பாராட்டிப் பரஸ்பரம் வசை புராணம் பாடியது போதும்! இது இனி ஒழியட்டும். இதில்தான் எமது எதிர்கால சுபீட்சம் தங்கியிருக்கிறது.

○

### லண்டனில் சிங்களக் கொடி

எங்கள் அயல்நாடாகிய பாரத தேசத்தில் நிகழும் சம்பவங்கள் இந்நாட்டுத் தலைவர்களுக்குத் தக்க போதனை அளிக்கவேண்டும். அங்கே ஜின்னு சாகிப்பும் அவருடைய லீகர்களும் ஆத்திரமும் கோபமும் மூட்டத்தக்க எவ்வளவோ கருமங்களை ஆற்றிவிட்டபோதிலும் பெரும்பான்மையினராகிய காங்கிரஸ் வாதிகள் தாராள மனத்துடன் நடந்துகொள்வதை இன்று அதிகாரம் படைத்துள்ள செனனுயக்காக் கோஷ்டியினர் அவதானித்து நடத்தல் நன்ருகும். அதிர்ஷ்ட வசமாக, இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் வகுப்புவாத விஷம் தலைக்கேறப்பெற்றுத் தனி ராஜ்யம் கேட்கவில்லை. நேர்மாருக தமிழ் மக்கள் மற்றும் சாகியத்தாருடன் தோளோடு தோள் சேர்ந்து, இந்த இலங்கையைப் பூரண சுயராச்சிய மாளிகைக்கு இட்டுச் செல்லும் போராட்டத்திலே முன்னணியில் நிற்க அன்றுபோல இன்றும் தயாராகத்தான் இருக்கிருர்கள்: ஆனுல் இந்த ஒத்துழைப்பை செனனுயக்காக் கோஷ்டி ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்றே சொல்லவேண்டியிருக்கிறது. இந்தக் கோஷ்டியினர் ஆற்றிவரும் செயல்கள் பல, சிறுபான்மையினரைப் பொதுவாகவும் தமிழ் மக்களைச் சிறப்பாகவும் வெறுத்தொதுக்கி நிற்கச் செய்வன. லண்டனிலே, இலங்கை அரசாங்க மாளிகையிலே சிங்களக்கொடியை மாத்திரம் ஆரோகணிக்கத் துணிந்தமை இதற்கு ஓர் உதாரணம். இந்தநாடு சிங்களர்க்கு மாத்திரம் உரியதல்ல. இது இங்கே வாழும் சகல மக்களுக்கும் சொந்தமானது என்பதனைச் சிங்களத் தலைவர்களுக்கு இப்போதே விளக்கத் தக்க தமிழ்த் தலைவர்கள் இல்லையா?

## பஞ்சம் பட்டினி!

### அடுத்த ஆண்டிலும் இப்படித்தானு?

புது ஆண்டுடனுவது இப்போதுள்ள உலக நிலை திருந்தி, மக்கள் வயிரார உண்ணமுடியாதா? முடியாது என்று அமெரிக்க அரசாங்கம் கருதுகிறது.

இந்த டிசெம்பர் மாதம் 31ம் திகதிக்கிடையில் 20 கோடி தொன் நிறை கொண்ட உணவுப் பொருள்களை அமெரிக்கா, பஞ்சத்தாற் பீடிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தது ஆனுல் அந்நாட்டிலே நிகழ்ந்துள்ள பல குழப்பங்களின் காரணமாக அத்தொகையை யனுப்ப முடியவில்லை.

அடுத்த ஆண்டிலே உலகத்துப் பஞ்ச நாடுகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முற்றும் கிடைக்கமாட்டா என்று அமெரிக்க அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது. தேவையான தொகையில் குறைந்தபட்சம் 1 கோடியே 10 லட்சம் தொன்னுவது குறைவு ஏற்படும் என அந்த அறிக்கை கூறுகிறது.

# சிங்கள ராஜ்யம்!

## சிலகாலத்தில் ஏற்படுமா?

"இன்று இலங்கையில் அதிதீவிரமான மாற்றங்கள் நிகழுகின்றன இவற்றைத் தமிழ் மக்களும், அவர்களின் தலைவர்கள் எனப்படுவோரும் அவதானித்துக்கொள்ள வேண்டும். எங்கள் ஜனத்தலைவர்களிற் சிலர் 'இனி என்ன செய்வது, எல்லாம் முடிந்துவிட்டன'' என்னும் தோல்வி மனப்பான்மையுடன், அதிகாரம் வகிக்கும் கட்சி பாடும் பல்லவிக்குத் தாளம்போடத் தயாராயிருக்கும் நிலையில் இருக்கிருர்கள். இது மிகவும் வெட்கமான கருமம்,"

என்றிவ்வாறு இலங்கைச் சர்வகலாசாலைப் பேராசிரியரான ஸ்ரீ எப். எச். வீ. குலசேகரம் அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நிகழ்ந்த பரிசளிப்பு விழாவின்போது தம் தலைமைப்பேருரையிற் கூறினுர்.

இவ்விழாவுக்கு அரசாங்கசபைப் பிரதிநிதி ஸ்ரீ எஸ் நடேசன் சமூகமாயிருந்து ஓர் சொற்பொழிவு செய்தார். ஸ்ரீ வ. ஆர். சுப்பிரமணியம் அவர்களுடைய பாரியார் பரிசுகளை வழங்கினுர்.

ஸ்ரீ குலசேகரம் மேலும் கூறியதாவது:

"எங்கள் தாய்ப்பாஷைகளை அபிவிருத்திசெய்து எங்கள் கலாசாரம் நாகரிகம் என்பவற்றைப் புனருத்தாரணம் செய்யவேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனுல் அதன்பொருட்டு, இப்போது உலகம் உள்ள நிலையில் ஆங்கிலத்தை நாம் புறக்கணிக்கவே முடியாது. உலகில் உள்ள ஜாதிகளில் அரைப்பாகத்[illegible], ஆங்கிலபாஷையை [illegible]ர்கள். எனவே, நாம் வெளியுலகுடன் தொடர்பு வைத்திருப்பதற்கு இன்னும் பலகாலத்துக்கு ஆங்கிலம் இருக்கத்தான் வேண்டும்.

"ஆனுல் இன்னும் சிலகாலத்திலே ஓர் சிக்கல்முக்கலான பிரச்சினை ஒன்று ஏற்படும் என்று நான் எச்சரிக்கிறேன். தேசீய பாஷை விஷயமாக ஆர்வமுடைய எம் இலங்கைத் தேசாபிமானிகள் இன்னும் சிலகாலத்தில் ஒரே பாஷை, ஒரே சமயம், ஒரே சாதிதான் இருக்கவேண்டும் என்று முயற்சி செய்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன். அந்தக்காலத்திலே இந்த இலங்கையிலே ஓர் சிங்களராஜ்யமும், வட-கீழ்ப் பகுதியிலே ஓர் அற்ப தமிழ்ராஜ்யமும் ஏற்படவும் கூடும்.

"இக்காலத்திலே அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆட்கள் நியமிக்கப்படும்போது, சிங்களப்பாஷையில் அறிவுடையவர்களே நியமிக்கப்படுகின்றனர் என்பதை நாம் அவதானிக்கவேண்டும்,

இப்படியாக நடக்கும் விஷயங்களை நாம் அவதானிக்காமல் இருக்கமுடியாது.

எங்கள் பள்ளிக்கூடங்களில் சிங்களமும் படிப்பிக்கப்படல் வேண்டும். சிங்கள அறிவுடைய எம் வாலிபர் அதனுல் தென் இலங்கையில் அரசாங்க முயற்சிகள்பெற வசதி ஏற்படுவதுமல்லாமல், இதனுல் சிங்களர்-தமிழர் ஒற்றுமையும் வளர ஏதுவாகும்.

இப்போதுள்ள இலவசக் கல்வித் திட்டத்தினுல் உண்மையில் வறியவர்கள், நன்மையடையமாட்டார்கள். செல்வர்களும் நடுத்தரவகுப்பினருமே நன்மைபெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளையரின் திமிர்!

## தென்னாபிரிக்க அரசியல்வாதியின் இறுமாப்பு

தென் ஆபிரிக்கா அரசாங்கம் செய்யும் அநீதி விஷயமாக, இந்தியாவும், தென்னாபிரிக்க அரசாங்கமும் ஓர் சமாதானத்துக்கு வரவேண்டும் என்று ஐக்கிய தேச ஸ்தாபனம் தீர்ப்புக் கூறியது தென்னாபிரிக்க வெள்ளையர்க்குப் பெரும் ஆத்திரத்தைக் கொடுத்துவிட்டது.

தென்னாபிரிக்கச் சட்டசபையிலே எதிர்க்கட்சித் தலைவரான டக்ரர் டீ. எப். மாலன் என்பவர், இப்படியாகத் தீர்த்த ஐக்கிய தேச ஸ்தாபனத்தை விட்டுத் தென்னாபிரிக்க அரசாங்கம் வெளியேறவேண்டும் என்று கர்ச்சிக்கிறார்.

"எது எப்படியிருந்த போதிலும் நாம் இந்தியர்க்குத் தென்னாபிரிக்காவிலே வெள்ளையருடன் சமத்துவ உரிமை கொடுக்க முடியாது. இப்படித் தீர்ப்பளித்த ஐக்கியதேச ஸ்தாபனம் உலகத்துக்கே ஆபத்தாக முடிந்திருக்கிறது.

"நாங்கள் இந்தியரை எங்கள் தென்னாபிரிக்காவிலிருந்து அகற்றி விடவேண்டும். இப்படிச் சிறுபான்மையினரை அகற்றி விடுவதாகிய முறை உலகத்திலே புதியதல்ல. ஐரோப்பாவிலேயுள்ள சிறுபான்மையினரை வல்லரசுகள் அந்த அந்த நாடுகளினின்றும் அகற்றவில்லையா?

"நாங்கள் இவ் விஷயத்தில் எவர்க்கும் பணியமுடியாது. ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் தீர்ப்பின்படி நடக்க முடியாது."

என்னே நிறத்திமிர்! தங்கள் சொந்த நலத்துக்கியைய நடவா விட்டால், ஐக்கியதேச ஸ்தாபனம அபாயமானதாம்! இந்த உலகத்திலே நீதியும் நியாயமும்வெள்ளையர்க்குத்தான் உரியன என்ற எண்ணமுள்ள இந்த வெள்ளையரின்கொட்டம்அடங்கும் காலம்சமீபத்தில் வருகிறது. ஒட்டவந்த பிடாரி, ஊர்த் தெய்வத்தை விரட்டியவாறு, நீக்கிரோவர்களின்சொந்த தேயமாகிய ஆபிரிக்காவிலே வர்த்தகம், சுரங்கத்தொழில் என்பவற்றின் பொருட்டு வந்த இந்த வெள்ளையர் அங்கே ஊன்றிக்கொண்டு, இப்போது தாமே அந்நாட்டு மன்னர் என்று அட்டகாசம் புரிகின்றனர். இந்த அட்டகாசம் ஒழியும் காலம் வரப்போகின்றது என்பதை இவர்கள் உணர்வாரக. வெள்ளையரல்லாத மக்கள் யாவரும் இன்று புத்துயிர் கொண்டு நிற்கின்றனர். இந்தியா வழிகாட்டுகிறது.

## உண்ண வேண்டாம்!

## செந்நிறமான பர்மாப் பருப்பு

பர்மாவிலிருந்து செந்நிறமான பருப்பு இலங்கைக்கு வந்திருக்கிறது. அதனைத் தான் அறிவிக்கும்வரை உண்ணக்கூடாதென்று, உணவுப் பகுதி அதிகாரி ஸ்ரீ கே. ஆழ்வாப்பிள்ளை ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

இந்தப் பருப்புவகை மிகவும் ஆபத்தானது. அதனை எப்படிச் சமையல் செய்யவேண்டுமென்பதை நன்கு ஆராய்ந்து முடிவு செய்யமுன், அதனை விற்கவேண்டாமென்றும், ஸ்ரீ ஆள்வாப்பிள்ளை வியாபாரிமாரைக் கேட்டுக்கொள்ளுகிறார்.

இந்தப் பருப்பிற் சில, வைத்திய ஆராய்ச்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பருப்பை உண்ட அநேக தோட்டத்தொழிலாளர் இறந்துவிட்டனர் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

## நாவலர் தினம்

7-12-1946 மாலை 5 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஈழநாட்டு இளைஞர் கழகத்தார் ஆறுமுக நாவலரவர்களுடைய 67வது விழாவினைக் கொண்டாடினார்கள். கூட்டம் கோகலே மன்றத்தில் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., அவர்கள் தலைமையில் நடந்தது கடவுள் வாழ்த்திற்குப்பின், யோகி சுத்தானந்த பாரதியார் அனுப்பிய செய்தியும், செய்யுளும் திரு. சு. குலசேகரம்பிள்ளை அவர்களால் இனிமையாகப் பாடப்பட்டன பின்னர், தலைவர் திரு. செட்டியார் அவர்கள் நாவலர் அவர்கள் தமிழிற்கும் சைவத்திற்கும் செய்துள்ள தொண்டினை எடுத்துப் பாராட்டிப்பேசினார்கள். நாவலரவர்களுடைய கல்வித் திறனையும் சொல்லும் ஆற்றலையும், பதிப்பு மேன்மையினையும், நுண்மா ணுழைபுலனையும் அஞ்சாநெஞ்சினையும்பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள், நாவலரவர்களுக்குத் தமிழிலக்கிய வரலாற்றில் உள்ள தனிப் பேர் இடத்தையுங் குறிப்பிட்டார்கள். நாவலர் அவர்களைப்போன்று நல்லொழுக்கமுடையவராகவும், நன் முயற்சியுடையராகவும், பிறர்நலம் பேணுபவராகவும் மக்கள் வாழ்வாரெனின். உலகினரால் மீக்கூறப்படுவர் என்று சொல்லி, சென்னையிலிருந்து வந்திருந்த சொற்பொழிவாளர் திரு. இளவழகனார் அவர்களை வரவேற்று அறிமுகம்படுத்திவைத்தார்கள்.

அதன்பின், இளவழகனாரவர்களுடைய இனிய சொற்பொழிவு நிகழ்ந்தது.......

சொற்பொழிவின் பின், திரு. டாக்டர் செட்டியார் அவர்கள் தமது முடிவுரையில் முயற்சியுடையோரே மக்கள் எனற்பாலர், பிறர் மக்களுருப்புடையராயினும் மரமே என்பதற்கு வேண்டிய பல சான்றுகளை எடுத்துக்காட்டி, மிக முயற்சியுடையராயிருந்ததாலன்றே நாவலரவர்கள் பெருமையுற்றார் என விளம்பினர். அன்றியும், குறிக்கோள் பெரியதாக, நல்லதாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் வற்புறுத்தினர். அருந்தமிழைப் பழித்தோன் யாவானாயினும் அவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்ற கவிஞரின் வாக்கினையும் நினைவுபடுத்தினர். அருந்தமிழாற்றல் அறியாது பழித்த காவா நாவிற் கனகவிசயர்பால் சீற்றங்கொண்டு செங்குட்டுவன் சென்று, கொற்றங்கொண்டு கோயில் எடுப்பித்ததை அரிய வீரவுணர்ச்சி ததும்ப எடுத்தியம்பினர்கள். அதன்பின், கழக அமைச்சர் திரு த. திருவாதவூரர் தலைவர்க்கும் சொற்பொழிவாளர்க்கும் சபையினர்க்கும் நன்றி கூறினர். பின்னர், இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. —கடித

* *

மறவன்புலோ சகலகலாவல்லிவித்தியாசாலையில் விய வருஷம் கார்த்திகை மாசம் உஅ ம் திகதி(13-12 46)வெள்ளிக்கிழமை பிற்பகல் மேற்படி குருபூசை மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. பூசையின் பின் மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. நா. பொன்னம்பலம் அவர்கள், நாவலர் பெருமானும் குருபூசையும் என்னும் பொருள் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்பின் திரு. ஏ. பொன்னையா அவர்களால் நாவலர் பெருமானின் அரும் பெருஞ் செயல்கள் என்பதுபற்றி சொற்பொழிவாற்றப்பட்டது. பின் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது —கடித.

* *

14-12-46 சனிக்கிழமைபிற்பகல் 6மணியளவில் நாவலப்பிட்டிசங்கஇந்துவாலிபர் ஆதரவில் கதிரேசன் கல்லூரியில் நாவலர் குருபூசைவிழாநடைபெற்றது அத்தருணம் "சைவமயமும்எங்கள்கடமையும்" என்பது பற்றி திரு. V. கார்த்திகேசு, B. Sc, அவர்கள் ஓர் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு, பிரம்மஸ்ரீ சர்மா கோஷ்டியினால் சங்கீதக் கச்சேரியொன்று செய்யப்பெற்றது. ஈற்றில் காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் [illegible] —கடித.

# சிங்களர்-தமிழர் உறவு

## அதிக உணவு

### இலங்கைக்குக் கிடைக்க மனு

1945-ம் ஆண்டில் உதவியதிலும் பார்க்கக் கூடிய தொகையான உணவுப்பொருள்களை இலங்கைக்கு அடுத்த வருடத்தில் உதவவேண்டுமென இலங்கை அரசாங்கம் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி மூலமாக வாஷிங்டனில் (அமெரிக்கா) உள்ள சர்வதேச அவசியகால உணவுச் சபைக்கு விண்ணப்பித்திருக்கிறது.

1945-ம் ஆண்டுக்கு மாதந்தோறும் 45,000 தொன் அரிசியும் மாவும் கிடைத்தன. இத்தொகை போதாது. 45,000 தொன் அரிசியும் 10,000 தொன் மாவுமாக 55,000 தொன் வேண்டும் என்றும் இலங்கை கேட்டிருக்கிறது,

இன்னும் இப்போது உதவப்படும் 75,00 தொன் சீனிக்குப் பதிலாக 9000 தொன் சீனியும் மாதந்தோறும் வேண்டும் என்று விண்ணப்பித்திருக்கிறது. இவற்றை விட 3000 தொன் தானியங்கள் மாதந்தோறும் வேண்டும் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டுடன் பழவற்றல்கள், உருளைக்கிழங்கு, விஸ்கோத்து வகை, தகரத்திலடைத்த உணவினங்கள் முதலாம் சில உணவுப் பொருள்கள் மீதுள்ள கட்டுப்பாடு நீக்கப்படும் வர்த்தகர் தாமாகவே, இப்பொருள்களை இறக்குமதி செய்ய வசதிகள் செய்யப்படும்.

அதிகமான பர்மா அரிசி

அடுத்த ஆண்டில் பர்மா அரிசி இலங்கையில் அதிகமாக இறக்குமதி செய்யப்படலாம் என்று உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஸ்ரீ கே, ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தெரிவிக்கிறார். இன்னும் ஜனவரி மாதம் நடுப்பகுதியிலிருந்து மாவின் விநியோக அளவு சற்று அதிகப்படலாம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

## ஆயுர்வேத சபை

### சாட்சியங் கொடுக்க யாழ்ப்பாணவைத்தியர் ஒழுங்கு

அகில இலங்கைத் தமிழ் வைத்திய சங்கத்தின் பகிரங்கக் கூட்டமொன்று நிகழும் விய வருஷ கார்த்திகைமீ 29-ந் உ (14-12-46) சனிக்கிழமை காலை 10 மணியளவில் சேணியதெரு சன்மார்க்க போதனா வித்தியாசாலைமண்டபத்தில் டக்ரர். V. S. இராமநாதன் அவர்கள் தலைமையில் கூடியது. அத்தருணம் சுதேசவைத்திய விசாரணைச் சபையாரால் அனுப்பப்பெற்ற 18 வினாக்களுக்கும் எவ்விதஞ் சாட்சியஞ் சொல்லவேண்டுமென்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு பின்வருந்தீர்மானங்கள் நிறைவேறப் பெற்றன

தீர்மானங்கள்

யாழ்ப்பாணத்திலும் ஓர் சித்த வைத்தியசாலையை யமைக்கவேண்டுமென்றும, அவ்வைத்தியக்கலாசாலையில் இப்போதிருக்குஞ் சுதேச வைத்தியர்களுக்கும் மேல்நாட்டு வைத்திய சாஸ்திர முறைப்படி வைத்திய அங்கங்களைப் படித்துத் தேறுவதற்கு ஏற்ற வசதிகள் செய்யப்படவேண்டுமென்றும், சுதேச வைத்தியர்களைப் பதிவுசெய்யும் விஷயத்தில் சென்னை அரசாங்க வைத்தியகலாசாலையைப் பின்பற்றி நடத்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன.

பின்பு சுதேச வைத்திய விசார[illegible] சாட்சியங் கொடுப்ப[illegible]ரையும், காரியதரிசி[illegible]யையும ஏகமனதாக நியமித்துக் கூட்டம் பிற்பகல் 1-30 மணியளவில் முடிவெய்தியது.

## உதவிவித்தியாதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம் புகையிரதஸ்தானத்துக்கணித்தாகவுள்ள அரசினர் சிங்களப் பாடசாலையின் ஆசிரியர்—பெற்றார் தினக் கொண்டாட்டம் சென்றவாரம் நிகழ்ந்தது.

இக்கொண்டாட்டத்துக்கு இலங்கை அரசாங்கத்து உதவி வித்தியாகர்த்தர் ஸ்ரீ சே. எஸ். அருள்நந்தியும் அவர் பாரியாரும் சமுகமளித்தனர். அவர்களைவரவேற்று, பாடசாலைத் தலைமையாசிரியரான மிஸ்ரர் ரீ. பி. ஹொரத் என்பவர் ஓர் சொற்பொழிவு செய்தார்.

இப்போதுள்ள பள்ளிக்கூடக் கட்டிடம் போதியதன்று என்றும் கட்டிடத்தைப் பெருப்பிக்கவேண்டிய தவசியம் என்றும் மிஸ்ரர் ரீ. என். பீரிஸ் கூறினர்.

இதன்பின் பேசிய ஸ்ரீ அருள்நந்தி இந்த யாழ்ப்பாணத்திற் குடியேறியுள்ள சிங்கள மக்களின் முயற்சியைப் பாராட்டிப் பின்வரும் கருத்துப்படக் கூறினர்:

இந்த இலங்கையிலே வாழும் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே சமயம், பாஷை என்னும் விஷயங்களில் பேதங்கள் இருந்த போதிலும் இரு சாகியத்தார்க்குமிடையே பல ஒற்றுமைப் பாடுகள் உண்டு. இந்த ஒற்றுமையை நாம் எல்லாரும் வளர்க்கவேண்டும். அப்போதுதான் நாம் எல்லாரும் ஈடேற முடியும்"


## விளம்பரம்

சங்குப்பிட்டி நீர்ப்பெருக்கு வாய்க்கால்களிலுள்ள வரம்புகளில் புற்கத்தை அடிப்பதற்கு வடமாகாணப் பகுதி ஏஜண்டரவர்கள் 1947-ம் ஆண்டு தைமாசம் 7-ம் தேதி செவ்வாய்க்கிழமை 12 மணிக்குள் குறித்த (ரெண்டர்) விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா ஐம்பது கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் மேற்குறித்த ரெண்டர் எழுதப்படவேண்டும்.

மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(G. 127 17-12 46)

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் சூடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீக்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீக்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்க்ட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துவணவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

"உம்பர் யாவருங் குறையிரந் திடலுநீ யுதவுஞ்
செம்பொ றித்தொகை யாற்றலும் வெம்மையுந் தெரிந்து
வெம்பி முற்றுடல் பதைப்புற வகன்றிவண் மீண்டேன்
எம்பெ ருந்தகை! அவ்வழல் நீக்கலா லென்றாள்.

தேவர்களனைவரும் குறையிரப்ப, தேவரீர் நெற்றி விழியிலே தோற்று வித்த செந்நிறமுடைய தீப்பொறிகளின் வலிமையையும் வெம்மையையும் உணர்ந்து, என் அகம்முழுவதும் வெம்மைகொண்டு பதைப்புற (அவற்றைச் சகிக்கலாற்றாது) இவ்விடத்தை விட்டகன்று, எம்பெருமானே! தேவரீர் அத்தீயின் ஆற்றலையும் வெம்மையையும் ஒழித்துவிட்ட காரணத்தினால் மீண்டு இங்கு வந்துள்ளேன் (என உமாதேவியார்) விண்ணப்பஞ் செய்தாரென்பது கருத்து.

உம்பர் யாவரும் இரந்த குறை - சூரபன்மன் முதலாம் அசுரரை வதைக்க வல்ல ஒரு திருக்குமாரனைத் தரல்வேண்டுமெனச் செய்த விண்ணப்பம் செந்தீயை நீங்கிற் சுடாதென்பர், ஆனால் இறைவனுடைய நெற்றிக்கண்ணிற் பிறந்த இப்பொறிகள் நெடுந்தூரம் போனாலும் எங்கச் சுடும் மாற்றலுடைமையாலும், வடவாமுகாக்கினியைக் காட்டிலும் வெம்மையுடைமையாலும் திருவருட்சத்தியாகிய தேவியின் திருமேனியையே வெம்பவும் பதைப்பவுஞ் செய்தமையினாலும் இவற்றையெல்லாம் தம் அநுபவத்திற் கண்ட இறைவி "செம்பொறித் தொகையாற்றலும் வெம்மையுந் தெரிந்து" என இறைவருக்கு முறையிட்டவாறும்; ஆக்கலும் அழித்தலும் தேவரீரின் அருள்வழியன்றி நடவாவென்பார் உமாதேவியார் "எம்பெருந்தகையவ்வழல் நீக்கலால் மீண்டேன்" என்றாரெனக. (5)

"கன்னி யிங்ஙனம் பகர்தலும் கருணைசெய் தருளித்
தன்னி டத்தினி லிருத்தின னிருந்திடு தையன்
முன்ன மோடலிற் சிதறுநூ புரமணி முழுதும்
என்னை யாளுடை நாயகன் முன்னிலங் கினவால்"

நித்திய கன்னிகையாகிய பிராட்டி இவ்வாறு விண்ணப்பஞ் செய்தலும், கைலாசபதி திருவருள் சுரந்து தமது இடப்பக்கத்திலே (தொன்மை போல்) இருக்கச்செய்தார்; அங்ஙனம் இருந்தருளிய தேவி முந்தி (இடப்பாகத்தை விடுத்து எழுந்து) ஓடியதனாற் சிதறுண்ட திருவடிச் சிலம்பிலுள்ள இரத்தினங்கள் முழுவதும், அடியேனை யாட்கொண்டருளிய இறைவருடைய முன்னிலையிற் கிடந்து ஒளிர்ந்தன என்பது கருத்து.

பெருமானுடைய அநுமதியின்றித் தாம் இடப்பாகத்தை விட்டெழுந்தோடியமைக்குக் காரணத்தை விண்ணப்பஞ்செய்து குறையிரந்து நிற்ப, அவ்வுமாதேவியாரைக் கருணை செய்து தம் வாமபாகத்தில் இருத்தியருளினார் கைலாசபதியென்பது இத்திருவிருத்தத்தின் முன்னிரண்டடிகளிலும் கூறப்பட்டவாறும்; முன்னம் - பெருமானுடைய நெற்றிவிழியில் அக்கினிப் பொறிகள் தோன்றியபோது. "என்னையாளுடை நாயகன்" என்றது ஆசாரியசுவாமிகள் கூற்று. (6)

"தளிரின் மெல்லடிப் பரிபுரமாயின தணந்து
மிளிரு மந்நவ மணிகளி னுணையால் விமலை
யொளிரு நல்லுருத் தோன்றின ஐம்முகத் தொருவன்
றெளிரு முச்சுட ரகத்திடை யமர்ந்திடுஞ் செயல்போல்"

ஐந்து திருமுகங்களையுடைய ஒப்பற்ற பரமேசுவரன் ஒளிருகின்ற சூரியன சந்திரன் அக்கினி யெனப்படும் முச்சுடர்களிடத்தும் விளங்குகின்ற தன்மைபோல, அசோகந் தளிரினும் மிருதுவாகிய (இறைவியின்) திருவடிச் சிலம்புகளினின்றுந் தெறித்த அந்த ஒளியோடு கூடிய நவமணிகளினிடத்து, சிவபிரானுடைய ஆஞ்ஞையினால், மலரகிதையாகிய ஈசுவரியின் சிறந்த அருட் டிருமேனி பிரதிவிம்பித்தது என்பது கருத்து.

ஐம்முகத்தொருவன் - சதாசிவமூர்த்தி; மிளிர்தல், ஒளிர்தல், தெளிர்தல், மூன்றும் பிரகாசித்தல் என்னும் பொருள்கொண்டன; விமலை - உயிர்களுடைய மலத்தை பொழிப்பவள்: நல்லுரு - அருள்நலத்தோடுகூடிய வடிவம், இறைவியின் திருமேனிப் பிரதிவிம்பம் (சாயை) சிவாஞ்ஞையினால், நிசமான சத்திவடிவை யெய்தியனவாதலின் "ஆணையால் நல்லுருத்தோன்றின" என்றார். சிவபிரானுடைய திருவடிவம் சூரியமண்டலம் சந்திரமண்டலம் அக்கினிமண்டலம் என்னும் மூன்று மண்டலங்களிலும் உருவத் திருமேனியாகத் தோன்றுந் தன்மைபோல, இறைவியின் திருவடிவம் அந்த நவமணிகளின் நாப்பண் தோன்றின என்பது தாற்பரியம்.

வைரத்தினத்தினொளி சூரிய ஒளியையும், மாணிக்கமணியினொளியும் பவளத்தினொளியும் அக்கினியின் ஒளியையும், முத்து புட்பராகம் கோமேதகம் வைடூரியம் என்னு மிவற்றினொளி சந்திரனொளியையும், மரகதமணி நீலமணிகளினொளிகள் அச்சந்திரனகத்துள்ள களங்கத்தினொளியையும் ஒத்திருததலின், கற்பனையிற் சிறந்த ஆசாரிய சுவாமிகள் நவரத்தினங்கட்கு முச்சுடரையும் முறையே உவமையாகக் கூறினர்போலும்.

[தளிர் - பிண்டித்தளிர்: நல்லுருத்தோன்றின - பிரதிவிம்பித்தன] (7)

"எண்ணி லாநவ மணிகளி னுமையுரு வேனைத்துங்
கண்ணி னுற்றெரிந் தநளினல் வட்மெனக் கழற
அண்ண லோர்வகை மணிக்கோரு சத்திகளாக
நண்ணி னார்நவ சத்திக ளமரர்நற் றவத்தால்"

சிவபிரான் அந்நவரத்தினங்களினிடத்து, தமது திருவுளக் கருத்தின் படி தோற்றிய ஈசுவரியின் பிரதிவிம்பங்களைக் கடைக்கண் சாத்தித் திருவருளுடன் 'வருகி' என்று திருவாய் மலர்ந்தருள, ஒவ்வொருசாதி இரத்தினத்திற்கும் ஒவ்வொரு சத்தியாக, தேவர்கள் செய்த நல்வினைப்பயனால் நவசத்திகளும் புறப்பட்டு (இறைவன் சந்நிதியை அடைந்தனர் என்பது) கருத்து.

அண்ணல்-சிவபிரான்; நவமணிகளில் எண்ணில் ஆம் எனக் கொண்டு கூட்டி அதற்கியையப் பொருள் கொள்ளுதலே பொருத்தமுடைத்தென்க; எண்ணில் ஆம் - (சிவபிரானுடைய) திருவுளக்கருத்தின்படி தோற்றிய; இங்ஙனமின்றி எண்ணிலா நவமணிகளென்பதற்கு அளவிடப்படாத நவரத்தினங்கள் எனப் பொருள்கொண்டமை சிறிதும் பொருந்தா தென்பது வெளிப்படை; சூரபன்மன் சிங்கன் தாரகன் என்னும் மூவரை யொழிந்த ஏனைய அசுரத் தலைவர்களை யெல்லாம், இந்நவசத்திகள்பாற் றோன்றிய வீரவாகுதேவர் முதலாம் நவவீரர்கள் வதைத்து, அவ்வசுரர்களால் தேவர்கட்கு நேர்ந்த இன்னலை ஒருபால் அகற்றினராதலின் "அமரர் நற்றவத்தால்" என்றார்.

[ஓர்வகை மணிக்கொரு சத்திகளாக - ஒவ்வொரு மணிக்கும் அவ்வந் நிறமுள்ள ஒவ்வொருசத்திகளாக(த் தோன்றினரென்க)] (8)

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## செவ்வாய் டிச 17

காலை 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கல்விடைக் குறிஞ்சி 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 எஸ் வி வசந்தகோகிலம் இசைத்தட்டு 8.30 கே சுந்தரராமையர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே சுந்தாராமையர் புல்லாங்குழல 2 தமிழில்செய்திகள 2.05 ஆங்கிலப் பேச்சு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவ

மாலை 5 வி எஸ் கிருஷ்ணய்யர் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் 7.15 நெஞ்சக் கட்டு நாடகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 தியாகராசர் றுாவண்டு வைபவம் 8 கல்விடைக் குறிஞ்சி ஏ பாலசுப்ரமணிய பாகவதர் பாட்டு 8-30 வி எஸ் கிருஷ்ணையர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 இசைமேளை 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9-40 அறிவிப்புகள் வானலை 9 45 தென்னிந்திய பாடல்கள் 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## புதன் டிச 18

காலை: 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 காலையார் கோயில் எம் எஸ் ஷண்முகம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வீணை சனபமாள் 8-30 எஸ் எஸ் வடிவாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 சுகர்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள 1-40 எஸ் எஸ் வடிவாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ்எஸ் வடிவாம்பாள் பாட்டு 2-15 கல்வி ஒலிபப்பு 2-45 முடிவு.

மாலை: 5 டி குருராஜப்பா பயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 வானொலி வாத்ய கோஷ்டி 7.30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால் பெட்டி 8 காளையார் கோயில் எம் எஸ் ஷண்முக சுந்தரம் பாட்டு 8-30 டி குருராஜப்பா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள 9-15 டி ஜி சங்கரகோபாலன் புல்லாங்குழல 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

## வியாழன் டிச 19

காலை 71-5 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வி ஆர் சாரதா வீணை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி கே பட்டம்மாள இசைத்தட்டு 8-30 ஸ்வாமிமலை எஸ் கலியாணசுந்தரதேசிகர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி ஜே ரத்னவர்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி ஜே ரத்னவர்மா பாட்டு 2-15 கல்விஒலி ரப்பு 2.45 முடிவு.

மாலை 5 வி ஆர் சாரதா வீணைபாட்டு 5-40 குரான்-ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள 7-45 கல்விடைக் குறிஞ்சி எஸ் ஹரிஹர ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9-40 அறிவிப்புகள் வானலை 9-45 உலக விவகாரங்கள் 10 நீங்கள் கேட்டவை 10.3 ஒலி ரப்பு முடிவு.

## வெள்ளி டிச 20

காலை: 7-.5 கிராரம்பம் 7-2 தமிழில் செய்திகள் 7.30 கே என் செல்லப்பா பாய் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்தியக் கோஷ்டி 8-30 கல்விடைக் குறிஞ்சி எஸ் லட்சுமி நாராயணன பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே என செல்லப்பாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள 2 05 கே என் செல்லப்பாபாய் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 ஏ கே கணேசபிள்ளை பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 திருச்சிக்குடி பிச்சைக்கண்ணு ச்கோஷ்டியினர்கள நாகஸ்வரம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 குடும்பம் 8 ஏ கே கணேசபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 இசைவேளை 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள வானிலை 9.45 ஜெ வி ராகவன் பாட்டு 10-30 முடிவு.

# சிங்களமே ராஜபாஷை

## என்கிறார் முந்திய பிரசாரப்புலி

யுத்த பிற்காலத்திட்டத்தின் பிரசார உத்தியோகத்தராக விருந்த மிஸ்ரர் ஆனந்ததீஸ டீ. அல்விஸ் என்பவர் கொழும்பு கிறிஸ்துவ வாலிபர் சங்கத்துக் கூட்டம் ஒன்றில் சென்ற வாரம் செய்த ஓர் சொற்பொழிவில், இந்த இலங்கையில் சிங்களத்தையே ராஜபாஷையாக்க வேண்டும் என்று கூறினர். அவர் இவ்விஷயமாக் மேலும் கூறியதாவது.

"இந்த இலங்கையிலே இரண்டு ராஜீய பாஷைகள் இருக்க வேண்டும் என்று கூறுவது பேய்த்தனத்தின்பாற்பட்டதாகும். சிங்களம் மாத்திரமே ராஜபாஷையாக இருத்தல்வேண்டும். அப்படிச்செய்ய முடியாவிட்டால் ஆங்கிலத்தையே முன்போல இராஜபாஷையாக்கி, அதனை எல்லார்க்கும் பயிற்றுதல் வேண்டும்.

"யாழ்ப்பாணத்து மக்கள் எங்கள் மீது கோபங்கொள்ளுவர், கிளர்ச்சி செய்வர் என்ற ஓர் காரணத்தால் தான் தமிழையும் ராஜபாஷையாக்க அரசாங்கம் தீர்மானித்தது. இந்த நாட்டுக்குரிய பிரச்சினைகளை இப்படியாக அவருக்குப் பயந்து, இவருக்குப்பயந்து ஆற்றினால் ஓர்போதும் நாம் முன்னேற முடியாது. எங்கள் சாதியே அழிந்து ஒழிந்துவிடும்."

இந்தத் தடித்த சிங்கள வகுப்புவாதியான அல்விஸ் இப்படி வெளிதிறந்து கூறியதையிட்டுத் தமிழ்மக்கள் அவரைப் பாராட்டியே தீர வேண்டும். ஆனால் இந்த இலங்கையின் பூர்வகுடிகள் யார் என்பதை இந்த அல்விஸும், ஏனைய நவீன தேசாபிமானிகளும் ஆராய்ந்தபின் இத்தகைய நச்சுக்கூற்றுக்களில் ஈடுபடுதல் நலம்.

## குத்தகை அல்லது விற்பனை

புன்னாலை தொல்புரத்தில் 372 பரப்பு நிலம் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு இருக்கிறது, தென்னை பனை, வான்பயிர்களும் தோட்டச் செய்கைக்குப் போதிய நிலமும் உண்டு; விபரங்களுக்கு எஸ் ஆர். வைரமுத்து தபாற்கந்தோர் யாழ்ப்பாணத்தில் அறிந்து கொள்ளலாம்

Mis 272, 13, 17, 20.12.46.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "லவங்கி"

## ஆபாசமான படம்

(வ. மகாலிங்கம், ஜீனருஜக் கல்லூரி கம்பளை.)

புராதன இந்தியாவின் கலைப் பண்பையும், காகரிகத்தையும் பளிங்குபோல் எடுத்துக்காட்டும் 'லவங்கி'' என்னும் தமிழ்ப் படம் ஆபாசத்துக்கு இடமளித்துவிட்டது மன்னிக்கமுடியாத குற்றம். கதைப் போக்கு, நடிப்பு, பாட்டு இவற்றுல் கலா ரசிகர்களின் ஆதாவைப் பெறக்கூடிய இத் தமிழ்ப்படம், "அசூரி" என்னும் அணங்கின் ஆபாச ஆட்டத்தால் அழுக்கடைந்துவிட்டது. "தமிழ்ப் படவுலகு கலாவுணர்ச்சியைக் காலடியில் தேய்த்து ஆபாசத்துக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும் அற்புத க்ஷேத்திரம்" என்னும் பொதுமக்களின்குற்றச்சாட்டை நிரூபிக்க, "லவங்கி' ஒருத்தியே போதும்.

அசூரியும் அவளது கோஷ்டியாரும் சேர்ந்து ஆடுவது நடனமா? அதனுற் கலைப் பிரியர்களின் மனதைக் கவர்ந்துவிடமுடியுமா? இல்லை ஒருபோதும் முடியாது. அசூரி தான் அணிந்திருந்த சல்லடை போன்ற மெல்லிய துணியைக் களைந்தெறிந்துவிட்டு ஆடினுலும், அதில் அதிக வித்தியாசமிருக்கமுடியாது அது நடனமல்ல; காமாந்தகாரத்தை இளம் உள்ளங்களிலேற்றிப் பொதுஜனங்களின் பணத்தைத் தட்டிப்பறித்து பட முதலாளிகளின் பணப்பெட்டியைநிரப்புவதற்குச் செய்யும் மாயாஜால வித்தை. கலை வளர்ச்சிக்கு உழைப்பதாக எண்ணிக் காமுகர்களின் தொகையை அதிகரிப்பித்தலிலும் பார்க்க அறியாமை என்ன இருக்கிறது? பட முதலாளிகளே பதில் சொல்லட்டும்.

இந்தப் படம் புனிதமான இஸ்லாம் காகரிகத்துக்கே ஓர் இழுக்கு. கலாதேவியின் அடிமையாகிய 'ஷாஜகான்' தனது தேவியின் அந்தப்புரம் இந்த நடனத்தாற் களங்கப்பட விட்டிருக்கமாட்டார். அரசிதானும் இதுபோன்ற நடனத்தைக் காண விரும்பியிருக்கமாட்டாள். இவையெல்லாம் கம் பட முதலாளிகளின் தடித்த மூளைகளுட் புகாமை விந்தையாகவிருக்கிறது.

கடைசியாகக் கல்வியறிவற்ற எனது ஏழைச் சகோதாருக்கு ஓர் வார்த்தை: தமிழ்ப் படவுலது மானத்தை விலைகூறி விற்கும் சந்தையாகவிருப்பது எமக்கே இழுக்கு. பொதுமக்களின் பணத்திற் புரளும் பட முதலாளிகளுக்குப் புத்தி புகட்டும் அற்புத சக்தி உங்களிடமுண்டு. கிளர்ச்சி செய்வதோடு நின்றுவிடுதல் தவறு. இலட்சிய வெற்றிக்கு உரைகல் தியாகம் ஒன்றே. நீங்கள் செய்யவேண்டிய தியாகம் ஒன்றே ஒன்றுதான், அது மிகவும் சுலபமானது. மகத்தானது. கைமேற் பலன் கொடுக்கக்கூடியது அதுதான் ஆபாசப் படங்களைப் பகிஷ்கரித்தல்.

## அகிம்சை யாருக்கு ?

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறது. எங்கள் ஹிந்து சமூகத்துக்கு வழிகாட்டிகளாக இரு நட்சத்திரங்கள்போல விளங்குவது ஸ்ரீ ராமன், ஸ்ரீகிருஷ்ணன் என்னும் இருவரது வாழ்க்கையுமே. சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது இராமன் அகிம்சை என்று கூறி ஒத்துழையாமை ஆற்றினுரா? இல்லை. தன் சீதையை மீட்க, அதர்மத்தைக் கெடுக்க ஓர் கொடிய யுத்தம் நடத்தினுர். கம்பன், சிசுபாலன், துரியோதனன் ஆகிய துட்டர்களை அடக்க ஸ்ரீகிருஷ்ணனும் பலாத்காரத்தைத்தான் உபயோகித்தார். எனவே, தர்மம் சிதையும்போது, எங்கள் சமூகம் அழியும்போது நாம் சத்தியாக்கிரகம் என்றும் அகிம்சை என்றும் கூறிக் கையைக் கட்டிக்கொண்டு இருக்கக் கூடாது. இதுதான் எங்கள் ஹிந்து தர்மம்; இப்படியான சந்தர்ப்பத்திலே கைகட்டிப் பேடிபோல நிற்றல் தான் அதர்மம்.

## 7500 அவுன்ஸ் தங்கம்

7500 அவுன்ஸ் நிறையான தங்கம், சென்றவாரம் அமெரிக்காவிலிருந்து பம்பாயில் இறக்குமதியானது.


தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்

### சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், மூரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 211 1.11-46—30-4-47 (வெ)



### பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis 25 23-4-46 to 22-3-47)



### நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினுல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)



விளம்பரமின்றேல்
பெரும் பணமில்லை



### NEW IRON SAFES FOR SALE
### புதிய இரும்புப் பெட்டிகள்
விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13.12 46—12-3-47



### India Super Tyres and Tubes
### இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்
கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால்
தேவையானதற்கு இப்பொழுதே உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47



### யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிரூப்பர்.

Mis 246 20-11-46—20-11-'7 (தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarpannai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, Desember, 17, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org